# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் III பரீட்சை – 2025 சனவரி

## (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

## பகுதி A

### வினா இல. 01

தரப்பட்ட விவரணத்தில் கம்பனியை பாதகமான முறையில் பாதிக்கின்ற மூன்று பொருளாதாரக் காரணிகளை விபரிக்குமாறு இந்த கோட்பாட்டு ரீதியான வினா கேட்டிருந்தது. பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடை அளித்திருந்ததுடன் சராசரிக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் விவரணத்துடன் தொடர்புடைய விசேட பொருளாதாரக் காரணிகளை முன்னிலைப்படுத்துவதற்குப் பதிலாக அரசியல் பிரச்சினைகள் மற்றும் சம்பந்தமற்ற விடயங்களில் கவனஞ் செலுத்தியிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

### வினா இல. 02

இவ்வினா **Coco PLC** பற்றிய விவரணத்தில் சுட்டிக் காட்டப்பட்ட இரண்டு உள்ளக இடர்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது. பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடை அளித்திருந்தனர். எவ்வாறாயினும், சராசரி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் கம்பனியுடன் குறிப்பாகத் தொடர்புடைய இடர்களை இனங்கண்டு விபரித்திருந்தனர். பல பரீட்சார்த்திகளின் விடைகள் வினாவுடன் பயனுறுதிவாய்ந்த முறையில் தொடர்புபடாததால் அவர்கள் புள்ளியை இழந்திருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை மிதமான மட்டத்தில் காணப்பட்டது.**

### வினா இல. 03

இது நன்கு கட்டமைக்கப்பட்ட ஒரு வினாவாகும். இங்கு கணக்காய்வு நடைமுறைகள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. ஒவ்வொரு கணக்காய்வு நடைமுறைக்கும் உதாரணந் தந்து கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான கணக்காய்வு நடைமுறைகளின் இரண்டு (2) வகைகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவுக்குச் சரியாக விடை அளித்திருந்ததுடன் கணக்காய்வு நடைமுறைகளையும் சரியாக விபரித்திருந்தனர். ஆனால் சிலர் உதாரணங்களை வழங்கத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் விபரங்களைப் பரிசோதித்து அவற்றை வகைப்படுத்துவதற்கான தேவையை வெறுமனே கூறுவது, உள்ளக மற்றும் வெளிவாரி ரீதியாக அவற்றை வகைப்படுத்துவது, நேர்மறை மற்றும் எதிர்மறை உறுதிப்படுத்தலின் நீண்ட விவரிப்புகளை வழங்குவது, கணக்காய்வுச் சான்றுகளின் தொடர்பு மற்றும் பொருத்தப்பாட்டுத் தன்மையை ஆராய்வது, இடர் மதிப்பீடும் அதன் வேலைச்சட்டகமும் போன்ற தவறான விடைகளை வழங்கியிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 04**

வினாவானது நிறுவனத்தின் தரக் கட்டுப்பாட்டு முறைமை மீது கவனஞ் செலுத்தியிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவுக்கு விடை அளித்திருந்தனர். ஆயினும் ஒரு தரக் கட்டுப்பாட்டு முறைமையின் இரண்டு மூலகங்களை இனங்காணுமாறு கேட்கப்பட்ட **பகுதி (a)** இற்காக சம்பந்தமற்ற பல விடைகள் வழங்கப்பட்டிருந்ததுடன், சிலர் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஈடுபடுத்தல் செயலாற்றுகையினது தரத்தின் மாறாத்தன்மைக்காக கணக்காய்வு நிறுவனம் கவனிக்க வேண்டிய விடயங்கள் பற்றி கேட்கப்பட்ட **பகுதி (b)** இற்கு வினா பற்றி புரிந்து கொள்ளாததால் ஒரு சில பரீட்சார்த்திகள் மோசமாக விடை அளித்திருந்தனர். அவதானிக்கப்பட்ட பொதுவான பலவீனங்களாக பாடப் பரப்பு தொடர்பில் அறிவு காணப்படாமை, பாடப் புத்தகத்தை நன்கு வாசிக்காமை, நிறுவன மட்டத்தில் தரக் கட்டுப்பாடு பற்றிய போதிய அறிவின்மை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

## பகுதி B

**வினா இல. 05**

இது மூன்று பகுதிகளைக் கொண்ட 10 புள்ளிகளுக்கான ஒரு வினாவாகும்.

**(a)** வினாவின் இப்பகுதிக்கு சராசரிப் புள்ளிகளுக்கும் மேல் பரீட்சார்த்திகள் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், தொடர்ந்தியங்குதல் என்ற கோட்பாட்டுப் பிரச்சனைகளுடன் தொடர்புடைய நடைமுறை விவரணத்திற்கு கோட்பாட்டு ரீதியான அறிவைப் பிரயோகிப்பதில் அவர்கள் சவால்களை எதிர்கொண்டிருந்தனர். பல பரீட்சார்த்திகள், தொடர்ந்தியங்குதல் என்பது நிச்சயமற்றதாக உள்ள இரண்டு கம்பனிகள் ஒரே பணிப்பாளரைக் கொண்டிருப்பதானது நிதி சார்ந்த அல்லது செயற்பாடு சார்ந்த இடர்களுடன் ஆளுகை சார்ந்த இடர்களை தவறாக இணைக்கிறது என்று தவறாகப் பிரயோகித்திருந்தனர். மேலும், அவர்களுடைய பதில்களில் பெரும்பாலும் போதுமான நியாயப்படுத்தலோ விமர்சன ரீதியான பகுப்பாய்வோ காணப்படவில்லை. இது IAS 1 மற்றும் ISA 570 போன்ற கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்களைப் போதுமானளவு குறிப்பிடத் தவறியிருந்தது. இந்த மேற்பார்வையானது ஒரு நிறுவனம் தொடர்ந்தியங்கும் திறனைப் பாதிக்கின்ற முதன்மைக் காரணிகள் பற்றிய தெளிவான புரிதலின் அவசியத்தை எடுத்துக் காட்டுகிறது.

**(b)** இது, தொடர்புடைய தரப்பினருக்கு வழங்கப்பட்ட கடன் தொடர்பான கணக்காய்வில் ஆற்றப்பட வேண்டிய கணக்காய்வு நடைமுறைகள் பற்றிய ஒரு நேரடியான கோட்பாட்டு ரீதியான வினாவாகும். எவ்வாறாயினும், அதிகளவான பரீட்சார்த்திகள் **BCC** என்பது ஒரு தொடர்புடைய தரப்பு என்பதை ஏற்பிசைவு செய்திருக்கவில்லை. இது மோசமான பதில்களுக்கு வழிவகுத்தது. பலர் தொடர்புடைய தரப்பு மீதிகளைச் சரிபார்ப்பதற்கான கணக்காய்வு நடைமுறைகள் பற்றி அறிந்திருக்கவில்லை.

**(c)** அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவைத் தவறாக விளங்கிக்கொண்டு, சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்ததால் புள்ளிகளை இழந்திருந்தனர். ஒரு சிலர் சம்பந்தமற்ற தகவல்களை உள்ளடக்கி நீண்ட பதில்களை வழங்கியிருந்தனர். இது குறைந்த அறிவையும் விளக்கத்தையும் பரீட்சார்த்திகள் கொண்டிருந்ததைக் காட்டுகிறது. விடய அடிப்படையிலான வினாக்களில் போதிய பயிற்சி இல்லாததாலும் விடைகளின் முறையற்ற கட்டமைப்பு காரணமாகவும் இது மேலும் அதிகரித்தது. இது தெளிவு, தொழினுட்பத் துல்லியம் மற்றும் பொருத்தமான நியமங்களுக்கான முறையான தொடர்பு ஆகியவற்றை உறுதிசெய்யத் தவறியிருந்தது.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை மோசமான மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 06

இவ்வினா ஒழுக்கநெறிகளின் அடிப்படைக் கோட்பாடுகள் பற்றிய அறிவையும் தரப்பட்ட விவரணத்தில் இனங்காணப்பட்ட அச்சுறுத்தல்களைக் குறைப்பது / நீக்குவதற்கான நடவடிக்கை களையும் மதிப்பிட்டிருந்தது. இது ஒரு சிறந்த வினாவாக இருந்தது.

**(a)** அதிகளவான பரீட்சார்த்திகள் சுயாதீனம், புறநிலைகள் மற்றும் ஒருங்கிணைப்பு போன்ற எண்ணக்கருக்களை தெரிந்து வைத்திருந்ததுடன் தொடர்புடைய அச்சுறுத்தல்களை வெற்றிகரமாக விவரித்து சராசரிக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் அச்சுறுத்தல்களை அடிப்படைக் கோட்பாடுகளுடன் குழப்பியிருந்ததுடன் வரவிருக்கும் வரி வணிகம் மற்றும் வரிக் கணிப்பீட்டைத் தயாரிப்பதில் கணக்காளருக்குச் சச்சின் உதவி செய்ததன் காரணமாக மிரட்டல் அச்சுறுத்தல் மற்றும் வக்காலத்து அச்சுறுத்தல் போன்ற தவறான அச்சுறுத்தல்கள் இனங்காணப்பட்டன. சில பரீட்சார்த்திகள் கோட்பாட்டு ரீதியான அறிவை, விவரணத்துடன் தொடர்புபடுத்தாது பிரயோகித்திருந்ததுடன், புதிய வரிச் சட்டங்களின் அறிமுகப்படுத்தல் போன்ற சம்பந்தமற்ற தலைப்புகள் ஆராயப்பட்டன.

**(b)** பரீட்சார்த்திகளின் சுயநலம், சுய – மீளாய்வு மற்றும் பரிச்சயம் போன்ற, அச்சுறுத்தல்களைக் குறைப்பதற்கு நடைமுறைப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு சரியான விடைகளை வழங்கியிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 07

இவ்வினா இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது. **பகுதி (a)** ஆனது விவரிக்கப்பட்ட விவரணத்துடன் தொடர்புடைய பொருள் மற்றும் பரவலான வேறுபாடுகள் இருக்கும்போது கணக்காய்வாளரின் அபிப்பிராயத்தை மாற்றுவதன் மீது கவனம் செலுத்தியது. பரீட்சார்த்திகள், பரீட்சகரின் எதிர்பார்ப்புகளை முழுமையாகப் புரிந்து கொள்வதிலும் இருப்பு மதிப்பீட்டில் சீராக்கம் செய்யப்படாத பொருள் வேறுபாடுகளின் விளைவுகளை விவரிப்பதிலும் சிரமப்பட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் கணக்காய்வு நியமங்களுடன் தொடர்புடைய பொருண்மை மட்டங்கள் மற்றும் பொருண்மை பிறழ்கூற்றுக்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தத் தவறியிருந்தனர். அதாவது ஒட்டுமொத்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் இலாபத்தன்மை மீதான தாக்கம் (இது நட்டமாக மாறியது) போன்றவை. சில பரீட்சார்த்திகள் பிறழ்கூற்றின் முறைமைசார் தாக்கங்களை நிவர்த்தி செய்வதற்குப் பதிலாக, பொருள்களின் விலை அல்லது இருப்பு உருப்படிகள் மற்றும் அவற்றின் தாக்கங்கள் பற்றி தவறாக கவனஞ் செலுத்தியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் பாதகமான அபிப்பிராயத்தை வெளியிடப் பரிந்துரைத்த அதே வேளை மீதமுள்ளவர்கள் ஈடுபடுத்தற் பங்காளர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அதை மாற்றியமைக்க அல்லது தகுதிப்படுத்தப் பரிந்துரைத்தனர்.

**பகுதி (b)** ஆனது, கணக்காய்வு அறிக்கை ஒன்றின் மூலகங்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவை மதிப்பிடுவதை நோக்காகக் கொண்டிருந்தது. குறிப்பிட்ட சூழ்நிலையைப் பொருட்படுத்தாமல் மூலகங்கள் மாறாது காணப்படுவதால் அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு நன்றாக விடை அளித்திருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை மிதமான மட்டத்தில் காணப்பட்டது.**

## <u>பகுதி C</u>

### வினா இல. 08

இது 5 பகுதிகளை உள்ளடக்கிய 25 புள்ளிகளுக்கான ஒரு வினாவாகும். இங்கு, செயன்முறை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீது கவனம் செலுத்தி, உற்பத்திச் சூழலில் உள்ள கணக்காய்வு பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு மதிப்பிடப்பட்டது. உள்ளகக் கணக்காய்வு அணியினால் இனங்காணப்பட்ட பிரச்சினைகளை மதிப்பிட்டு கோட்பாட்டு ரீதியான அறிவைப் பிரயோகிப்பது பற்றிக் கேட்கப்பட்டது. இங்கு கீழ்வருவன தொடர்பில் வினவப்பட்டன.

**(a)** பிரதான வணிகச் செயன்முறைகளை இனங்காணுதல்.

**(b)** தற்போதுள்ள முறைமையின் பலவீனங்களை பரிந்துரைகளுடன் இனங்காணுதல்.

**(c)** நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை விவரித்தல்.

**(d)** அதிகாரம் அளிக்கப்படாத நிகழ்ச்சிநிரல் மாற்றங்களைக் கண்டறிந்து தடுப்பதற்கான பொதுக் கட்டுப்பாடுகளுக்கு உதாரணங்களைக் குறிப்பிடுதல்.

**(e)** பொதுவாக ஏதாவது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் குறைபாடுகளை ஏற்படுத்தக்கூடிய அறிகுறிகளைக் குறிப்பிடுதல்.

பல பரீட்சார்த்திகள் வினாவின் கட்டமைப்பு பற்றிய பரிச்சயத்தைக் கொண்டிருந்ததை அவர்களது பதில்கள் எடுத்துக் காட்டியிருந்தன. பல பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் பகுதிகள் **(a), (b), (d)** ஆகியவற்றிற்கு நன்றாக விடையளித்திருந்தனர். பகுதிகள் **(c)** மற்றும் **(e)** இற்கான பதில்கள், அந்தக் குறிப்பிட்ட பாடப்பரப்புகளில் காணப்பட்ட பரிச்சயமின்மை அல்லது அவை தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டதன் காரணமாக பலவீனமானதாகக் காணப்பட்டன.

**(a)** அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவுக்கு விடை அளித்திருந்ததுடன் செயன்முறைகளையும் சரியாக இனங்கண்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் சிங்களத்தில் சற்று வேறுபட்ட தொழினுட்பச் சொற்களைப் பயன்படுத்தியிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையளித்திருந்ததுடன், பலவீனங்களை இனங்கண்டு, உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்களுக்கான பரிந்துரைகளை வழங்கியதன் மூலம் பொருத்தமான விடைகளை அளித்து சராசரிக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், ஒரு சில பரீட்சார்த்திகள் தவறாக விளங்கிக் கொண்டதன் காரணமாக **பகுதி (a)** இற்கான பதில்களை இப்பகுதிக்கு திரும்பவும் எழுதியிருந்தனர்.

**(c)** வினாவின் இப்பகுதிக்கு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் விடை அளித்திருந்த போதிலும், அவர்களது பதில்கள் பொதுவாக மோசமானதாகவே இருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவை விளங்கிக் கொள்வதில் சிரமப்பட்டிருந்ததுடன் சம்பந்தமற்ற தகவல்களையும் வழங்கியிருந்தனர். இது நேர விரயத்திற்கு வழிவகுத்தது.

**(d)** அதிகளவான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு விடையளித்திருந்தனர். இது ஒரு நேரடியான வினாவான இருந்ததால் பெரும்பாலானவர்கள் சரியான விடைகளை அளித்திருந்தனர்.

**(e)** இது, ஒரே மாதிரியான வினாக்களை மீண்டும் மீண்டும் கேட்காது பரீட்சார்த்திகளின் அறிவை மதிப்பிடுவதற்காக நன்கு கட்டமைக்கப்பட்ட ஒரு வினாவாகும். வினா நன்கு கட்டமைக்கப்பட்டதாக இருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் குழப்பமடைந்திருந்ததுடன் சம்பந்தமற்ற விடைகளையும் வழங்கியிருந்தனர். ஒரு சில பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 09**

இது 25 புள்ளிகளுக்கான விவரணத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாவாகும். இது பரீட்சார்த்திகளின் கணக்காய்வுத் திறன்கள் மற்றும் பிரதான பாடப்பரப்புகளில் அவர்கள் கொண்டுள்ள அறிவு ஆகியவற்றை மதிப்பிடுவதற்காக வடிவமைக்கப்பட்டிருந்தது. இதில் திட்டமிடலின் முக்கியத்துவம், தரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு **Malcom PLC** இன் இடர் பகுதிகளை இனங்காணுதல், நியாயமான உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடு, மோசடியான நிதி அறிக்கையிடல், மோசடிகளைக் கண்டறிந்து, தடுப்பது தொடர்பாக **Malcom PLC** இன் முகாமையின் பொறுப்பு, முகாமை மற்றும் ஆளுகை பாரப்படுத்தப்பட்டோருக்கு விவரணத்துடன் தொடர்புடைய கண்டறிதல்களைத் தெரிவித்தல் ஆகியவை அடங்குகின்றன.

**(a)** அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடை அளிக்க முயற்சித்து, ஓரளவு சிறந்த விடைகளை வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் வினாவைப் பிழையாக விளங்கிக் கொண்டதன் காரணமாக, தரப்பட்ட விவரணத்திற்கான இடர் பகுதிகளை இனங்காணத் தவறியிருந்தனர். அவர்கள் நிதிப் பிரிவு, மனித வளப் பிரிவு, முகாமை போன்ற சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்தனர். சிலர் பொதுவான விடைகளை எழுதியிருந்தனர். அவர்கள் விவரணத்துடன் தொடர்பற்ற காசு போன்ற பகுதிகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

**(b)** குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் நியாயமான மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்களுக்கிடையிலான வேறுபாடுகளை பயனுறுதிமிக்க வகையில் விபரித்திருந்ததுடன் நல்ல புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(c)** சில பரீட்சார்த்திகள் குறிப்பாக வழங்கப்பட்ட கணக்காய்வைக் குறிப்பிடாது கணக்காய்வு நிறுவனத்தின் பார்வையில் இருந்து பொதுவான பதில்களை வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் தங்களது விடைகளை தரப்பட்ட விடயங்களுடன் வெற்றிகரமான முறையில் தொடுப்புச் செய்திருந்தனர். இருப்பினும் கணக்காய்வுத் திட்டமிடலானது நிறுவனத்தின் வினைத்திறனையும் இலாபத்தன்மையையும் மேம்படுத்தி, சீரான இயக்கத்திற்கும் மோசடியைத் தடுப்பதற்கும் முகாமைக்கு உதவுகிறது என்பன போன்ற சம்பந்தமற்ற விடைகளும் காணப்பட்டன.

**(d)** **(i)** பல பரீட்சார்த்திகள் பொது அறிவைப் பயன்படுத்தி விடையளித்து, 'மோசடி' என்ற சொல்லை வெறுமனே விளக்கியிருந்ததால், சில புள்ளிகள் கிடைத்திருந்தன. பெரும்பாலானவர்கள் இது நிதிக் கூற்றுக்களைப் பொய்யாக்க உண்மையான பதிவுகளை மாற்றுவது போன்ற தனிப்பட்ட நலன்களுக்காக வேண்டுமென்றே தகவல்களைக் கையாள்வது எனச் சரியாகக் குறிப்பிட்டிருந்தனர். எவ்வாறாயினும், கணிசமானளவு பரீட்சார்த்திகள் ''வேண்டுமென்றே'' என்ற பதத்தை வெளிப்படையாகப் பயன்படுத்தத் தவறியிருந்தனர். அதற்குப் பதிலாக தரப்பட்ட பதமான 'மோசடி' என்பதை நம்பியிருந்தனர்.

**(ii)** பெரும்பாலானவர்கள் இந்தப் பகுதிக்கு விடையளிக்க முயற்சிக்கவில்லை. எவ்வாறாயினும், இதற்கு நன்றாக விடையளித்தவர்கள் மோடியைக் கண்டறிதலும் தடுத்தலும் என்பது முகாமையின் பொறுப்பு எனச் சரியாக குறிப்பிட்டு, புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(e)** இவ்வினா முகாமைக்கும் ஆளுகை பாரப்படுத்தப்பட்டோருக்கும் தெரிவிக்க வேண்டிய விடயங்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சிக்கவில்லை என்பதுடன் ஏனையவர்களால் அளிக்கப்பட்ட விடைகளும் பொதுவாக மோசமானதாகக் காணப்பட்டன.

\- - - -

## <u>தேர்வு நாடிகளின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்த கவனத்தில் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u>

1. பாடநூலை கவனமாக வாசித்து அதில் வழங்கப்பட்டுள்ள பகுதிகள் விளங்கிக் கொள்ள வேண்டும்
2. இப்பாடத்துடன் தொடர்புடைய நூல்கள் கையேடுகள் மடல்கள் நாட்குறிப்புகளை வாசிக்கவும்
3. செயல் வினைச் சொற்களின் வரைவிலக்கணங்களை விளங்கிக் கொள்வதோடு அச்செயல் வினைச் சொற்களுக்கு அமைவாக கேள்விகளுக்கு விடை அளிக்க பயிற்சி செய்தல்
4. குறைந்தது கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்கான கடந்த கால வினாக்களை பயிற்சி செய்வதோடு எவ்வாறு கேள்விகள் தயாரிக்கப்படுகின்றன என்பதை புரிந்து கொள்ளல்
5. கேள்வியில் வழங்கப்பட்டுள்ள கருத்தியல்களையும் அவற்றின் பிரயோகங்களையும் புரிந்து கொள்ளல்
6. கடந்த கால வினாத்தாள்களில் பரிட்சிக்கப்பட்ட பாடநூலில் காணப்படும் பகுதிகளில் சிறு குறிப்புகளை எடுத்து அவற்றை தெளிவாக விளங்கிக் கொள்ளல்
7. கடந்த கால வினாத்தாள்களை நேரத் திட்டமிடலுடன் விடை அளித்து பழகல்
8. பாடநூலில் காணப்படும் அத்தியாயங்களுக்கு சிறு குறிப்பு எடுத்து அவற்றை மனப்பாடம் செய்தல்
9. விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுத பழகல்
10. கேள்விகளுக்கு விடை அளிக்க முன் அறிவுறுத்தல்களை தெளிவாக வாசித்தல்
11. சரியான மனநிலையில் பரீட்சை எழுதல்
12. புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு கேள்விக்கும் ஆன நேர ஒதுக்கீட்டை தீர்மானித்தல்
13. விடைத்தாள்களை கையளிக்கும் முன் எல்லா வினாக்களுக்கும் சரியாக விடையளிக்கப்பட்டுள்ளதா மேலும் இலக்கங்கள் சரியாக இடப்பட்டுள்ளது என இரு முறை பார்த்தல்.

- * * * -